வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது

செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

பிரதி விலை: சதம் 15

சைவபரிபாலன சபை வெளியீடு.

ஆரம்பம்: விரோதி ௵ (1889) ஆவணிமீ 28-ம் உ  அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.  தொலைபேசி: 356

புத்- அச] யாழ்ப்பாணம்:- பரிதாபி ௵ சித்திரை மீ ௨௰ உ வெள்ளிக்கிழமை (12-5-1972) [இல: ந

# தாழ்வெனுந் தன்மை உடையவர்

## திருநாவுக்கரசு நாயனுர் குருபூசை

"தாழ்வெனும் தன்மையோடும் சைவமாஞ்சமயஞ் சாரும் ஊழ்பெறலரிது" என்றூர் அருணந்தி சிவாசாரியர். தாழ்மை என்னும் பண்பு ஆன்மா நற்கதியடைய அவசியந்தேவை. திருநாவுக்கரசு நாயனுர் தாழ்வெனுந் தன்மையுடன் வாழ்ந்து ஆன்மாக்களுக்கு நல்வழிகாட்டியவர். அவர் சிவவேடப் பொலிவுடன் யாத்திரை செய்து உழவாரப்பணி புரிந்தனர். ஓத ஓத உள்ளத்தை உருக்கும் தேவாரப் பதிகங்களை உலகுக்களித்தார்." இவ்வாறு 8-5-72 அன்று சைவ பரிபாலன சபை ஆதரவில் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்ற திருநாவுக்கரசு நாயனுர் குருபூசை விழாவில் தலைமை வகித்த சபைத் தலைவர் திரு. த. சோமசுந்தரம் அவர்கள் கூறினுர்.

"என்னில் யாரும் எனக்
கினியாரில்லை
என்னிலு மினியா னெருவ
னுளன்"

திருநாவுக்கரசு நாயனுர் தன்னிலும் பார்க்க இறைவனை இனியவராகக் கண்டார். ஆன்மக்களாகிய எங்களையும் தன்னுடைய வழியிலே ஒழுகிச் சிவபெருமானை எம்மிலும பார்க்க இனியவராகக் காணும் பொருட்டு அதி அற்புத அதிமதுரத தேவாரத திருமுறைகளை நமக்குத் தந்தருளினுர். திருநாவுக்கரசு நாயனுர் தாச மார்க்கத்தில் நின்றெழுகினுர். 'திருவடி'யை வயந்து பக்திபணணிப் பாடுவார். திருவடியின் பெருமையை விளக்க திருவடித் திருத தாண்டகம் என்ற ஒருபதிகமேயுள்ளது. அது 'அரவணையான் சிந்திததாற்றும் அடி' என ஆரமபிக்கும. ஈற்றிலே வாகீசப்பெருமான் திருப்பூம்புகலூரிலே 'புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்' என்றாற்றிக் கொண்டு முத்தியடைநதார். நெடுந்தீவு, சைவபூஷணம் திரு. தி. கணபதிப்பிள்ளையவர்கள் 'திருநாவுக்கரசரும் தேவாரமும்' எனனும்பொருள் பறறி பேசும்பொழுது குறிப்பிட்டார்.

'அடியார் பெருமையளப்பரியது' சர்வவல்லபமுடைய சிவபெருமான் அடியாருள்ளத்தில் ஒடுக்கம். ஆகையினுல்தான் சிவபெருமான் 'அடியார்க்கெளியன்' எனத் தன்னை உமாபதி சிவாசாரியாரியாருக்கு எழுதிய சீட்டில் குறிப்பிட்டார். அந்த வகையில் அடியார் பெருமையையுணர்ந்தவர் அப்பூதியடிகள். அவர் ஒரு பிராமணன், திருநாவுககரசு நாயனுரிடத்தில் மிகுந்த பக்தியுடையவர். அவரை நேரே காணமுன்பு அவரிடத்தில் அன்பு செலுத்தினுர் திருநாவுக்கரசு நாயனுருக்கு விருந்தளித்தபொழுது அரவு தீண்டி இறந்த மகனை நாயனுர் 'ஒன்றுகொலாம' என்ற தேவாரப் பதிகத்தைப் பாடி உயிர்பெறச் செய்தார். அன்பின் பெருமை அளப்பரிது.' இவ்வாறு, அராலி தெற்கு சைவப் பெரியார் திரு. மு சதாசிவம் அவர்கள் "அப்பரும அப்பூதியடிகளும்" என்னும் பொருள்பற்றிப் பேசிய பொழுது குறிப்பிட்டார்.

பகல் ஸ்ரீமத். ம. சுப்பிரமணியக் குருக்கள் சிவபூசை நடராஜர் பூசைசெய்து தமிழ் மறை ஓதினுர். பின்பு மாகேசுர பூசையும் நடைபெற்றது. ——

### முளங்காவில் செல்வச்சித்தி விநாயகர் கோயில்

பரிதாபி ஆண்டு வைகாசித் திங்கள் கஉ-ம் நாள் (26-5-72) வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் விநாயகப் பெருமானுக்கு விசேஷ சங்காபிஷேகம் நடைபெறும். பின்பு அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப் பெறும். (ந. நி.)

உ
திருச்சிற்றம்பலம்

என்ன புண்ணியஞ்
செய்தனை நெஞ்சமே
யிருங்கடன் வையத்து
முன்ன நீபுரி
நல்வினைப் பயனிடை
முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி
சூழ்திரு வலஞ்சுழி
வாணனை வாயாரப்
பன்னி யாதரித்
தேத்தியும் பாடியும்
வழிபடு மதனுலே.

திருச்சிற்றம்பலம்
—திருஞானசம்பந்தசுவாமிகள்.

### சங்காபிடேகம்

அரியாலை. ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தில் 17-5-72 புதன்கிழமை பகல் 11 மணியளவில் சங்காபிஷேகமும் இரவு உற்சவத்தில் பஞ்சமுக விநாயக மூர்த்தி பூந்தொட்டியிலெழுந்தருளுவர்

—:—

### விஷகடி வைத்தியர் திரு. க சிற்றம்பலம் அவர்கள்

அண்மையில் இந்தியாவுக்குச் சென்றிருந்த பிரபல விஷகடி வைத்தியர் திரு. க. சிற்றம்பலம் அவர்கள் தஞ்சாவூர் சரஸ்வதி சரபோஜி மகாராஜா நூல் நிலையத்திறகுச்சென்று பாம்புவிஷம் சம்பந்தமான பல ஏடுகளை ஆராய்நதனர். சென்னையிலுள்ள பாம்பு பண்ணைக்குச் சென்று அப் பண்ணை நிபுணர் திரு. விடோருடன் பாம்புகளைப பறறி ஆராய்ச்சி புரிநதனர். விடோர் ஒரு அமெரிக்க பாம்பு நிபுணர். அப் பாம்புப் பூங்காவில பன்னூற்றுக் கணககான பாம்பு வகைகளுணடு.

# நினைவு மண்டபம் நிறுவுதல் வேண்டும்

— பண்டிதர் த. சுப்பிரமணியம், சித்தங்கேணி —

(முன் வளர்ச்சி — 3)

வடமொழியிலேயுள்ள பௌஷ்கராகம அகோர சிவாசாரியார் பத்ததிக்கு அம் மொழியிலேயே பேருரை யெழுதிய பெருமை அம்பலவாண நாவலருக்கே யுரியதாகும். பௌஷ்கராகம விருத்தி ஒரு சைவ சித்தாந்தப் பொக்கிஷம். இதனைத் தமிழில் மொழிபெயர்த்துச் சைவத் தமிழுலகிற்கு அளிக்கவேண்டுமென்பது அறிஞர்கள் கருத்தாகும்.

திருநெல்வேலி நெல்லையப்பர் கோயிலின் கீழரத வீதியிற் பரிபாலிக்கப்பட்டு வரும் திருஞானசம்பந்த ஸ்வாமிகள் மடலாயம், சித்தன்கேணி. வட்டுக்கோட்டை மக்களின் கண் போன்று விளங்கும் இந்துக் கல்லூரி என்பன இவர்தம் அரும்பெரும் முயற்சியால் நிலைத்து விளங்கும் நிலையான ஞாபக சின்னங்களாகும்.

இக்கல்லூரியிற் பயின்று அறிவொளி பெற்றுப் பிரகாசிக்கும் பழைய மாணவர்கள், அன்பர்கள், அநுதாபிகள், சிறப்பாக உறவினர்கள் அனைவரும் அன்னாரின் தொண்டுகளை என்றும் மறக்க முடியாது.

அம்பலவாண நாவலரை என்றும் நினைவுறுத்தி நிற்கும் இத்தாபனம ஆரம்ப காலததில் சித்தன்கேணியில் ஒரு வீட்டிற் சமய நூல்கள் கற்பிக்கும் பாடசாலையாகவிருந்தது. பின்னர் அக்காலத்திலிருந்த நொத்தாரிஸ் அருணசலம் சிதம்பரநாத பிள்ளையின் உதவியுடன் தற்போதைய இடத்தில் சைவாங்கில பாடசாலையாக அமைக்கப்பட்டு இன்று பிரபல கல்லூரியாகவளர்ச்சியடைந்து குன்றிலிட்ட தீபம்போலப் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றது. இத்தாபனத்தை ஆக்கிவைத்த அம்பலவாண நாவலரின் தொண்டினை நன்கு மிளிரச்செய்வது கல்லூரியுடன் தொடர்புகொண்டுள்ள பெற்றூர், ஆசிரியர், மாணவர்களின் நீங்காத கடமையாகும்.

ஏனைய கல்லூரிகளின் தாபகர் விழாக் கொண்டாடப்படுவதுபோன்று இக் கல்லூரிப் பெற்றூர் ஆசிரிய சங்கம் வருடந்தோறும் தாபகர் விழாவைச் சிறப்பாகக் கொண்டாட முன்வரவேண்டும. 1963-ம் ஆண்டு கல்லூரியில் நடைபெற்ற 'சற்குருமணிமாலை' வெளியிட்டு விழாவிலும் இது பற்றிக் குறிப்பிட்டோம்.

அவருடைய சந்ததியில் வந்தவர்கள் இந் கல்லூ

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

### வீரச்சுவையை அப்பரின் பாடல்களில் காண்கின்றேம்.

யாழ்ப்பாண மத்திய கல்லூரி இந்துமாமன்றம் திருநாவுக்கரசு நாயனுர் குருபூசையை 8-5-72 திங்கட்கிழமை நடாத்தியது. மன்றததின் (மாணவ) தலைவர் செல்வன் இ. சுரேந்திரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் ஆசிரியர் திரு. ஷண்முக. குமரேசன் அவர்கள் "அப்பரின் அருட்பாடல்கள்" என்னும் பொருள்பற்றி பேசுகையில் "சமயத்துக்கு மட்டுமன்றித் தேவாரம பாடிய மூவரும், தமிழிலக்கியத்துக்கே தொண்டாற்றினுர்கள். அப்பரின் தேவாரததில் வீரச்சுவையைக் காண்கின்றேம். 'நாமார்க்குங் குடியல்லோம் நமனையஞ்சோம்' என்று அவர் வீரத்துடன் பாடியிருக்கின்ருர். தேவாரப்பாடல்களால் வலிமைபெற்ற தமிழ்மக்கள் படைதிரட்டிப் பெரிய சோழ சாம்ராச்சியத்தை அமைத்துக் கொண்டார்கள் என விபுலானந்த அடிகள் கூறியுள்ளார்கள்.

தம்மை யாரெனக் காட்டிக்கொள்ளவிரும்பாத திருநாவுக்கரசரிடம் அடக்கத்தைக் காணலாம். அந்தணரின் மோபட்ட அப்பூதியடிகளைச் சந்தித்துப் பேசிய பொழுது இவ்வடக்கம் நன்கு தெரியவந்தது. சூலை நோய் தமக்கு வந்ததை அப்பொழுது நினைவூட்டினுர்.

இந்திரனுக வரவிரும்பிய விசுவாமித்திரர் மேனகையின் ஆடலில் மயங்கினுர். தவத்தைக் கைவிட்டார். ஆனுல் இந்திரலோகத்துக்கும் அப்பாற்பட்ட வீட்டின்பத்தை நாடி ஒழுகிய அப்பரோ அரம்பையரின் ஆடல் பாடல்களால் மனம மாறுபடாது 'சித்தநிலை திரியாது செய்பணியின் தலை நின்ருர்' என்று கூறினுர். செல்வன் கு. ஆனந்தகுமார் நன்றியுரை நிகழ்த்தினுர்.

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமா ஞைமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

பரிதாபிஞூ சித்திரைமீ ௨0-௨ வெள்ளிக்கிழமை [1972]

## குடியரசுப் பிரகடனம்

புதிய குடியரசுத் திட்டம் வருகிற மே மாதம் 22-ஆந் தேதி தேசிய சபையால் அங்கீகரிக்கப்பட்டவுடன் இப்பொழுது தேசாதிபதியாகக் கடமையாற்றுகின்ற உயர்திரு. வில்லியம் கோபல்லவா அவர்கள் ஜனுதிபதியாக தேசிய சபையில் தெரிவு செய்யப்பட்டுச் சத்தியப் பிரமாணஞ் செய்து புதிய குடியரசாட்சியை ஆரம்பிப்பார். இனிமேல் அவர் ஆங்கில அரசின் தலைவி எலிசபெத் இராணியினுடைய பிரதிநிதியாகக் கடமையாற்றமாட்டார். "இலங்கைக் குடியரசுக்கும் குடியரசுச் சாசனத்துக்கும் விசுவாசமும் பணிவும் உடையவனுகக் கடமையாற்றுவேன்' எனச் சத்தியப் பிரமாணஞ் செய்துகொள்வார். அடுக்க ஸ்ரீமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக அவர்கள் குடியரசின் முதற் பிரதம மந்திரியாகத் தெரிவு செய்யப்பட்டுச் சத்தியப் பிரமாணஞ் செய்து கொள்வார். பின்பு மற்றைய மந்திரிமார்கள் தெரிவு செய்யப்பட்டுச் சத்தியப் பிரமாணஞ் செய்துகொள்வார்கள்

குறித்த மே மாதம் 22ம் தேதி இலங்கையின் சரித்திரத்தில் ஒரு முக்கியமான தினம். இலங்கையை குடியரசாக்க வேண்டுமென்ற கருத்தை மூதல்முதல் 1956ல் வெளியிட்டவர் காலஞ்சென்ற பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா அவர்கள் தான் குடியரசாகும் திட்டம் அப்பொழுதே தொடங்கப்பட்டு அரசியல் மாற்றங்களால் தடைப்பட்டுவிட்டது. இப்பொழுது அவருடைய பாரியார் பிரதம மந்திரியாகக் கடமையாற்றுகையில் அவருடைய கருத்து நிறைவேறுகின்றது.

நாட்டின் சுதந்திரம் ஒவ்வொரு பிரசைக்கும் உரிய சொத்து. இலங்கை பல இனத்தவர்கள் வாழுகின்ற நாடு. நாட்டின் சுதந்திரத்தை பெரும்பான்மையினராகவுள்ள சிங்கள மக்களும், சிறுபான்மையினராகவுள்ள தமிழ் மக்களும் பிறரும் அடையக்கூடியதாக இருத்தல் வேண்டும். நாட்டை ஆங்கிலேயர் ஆட்சிசெய்த காலத்தில் சிங்கள மக்களுடன் தமிழ மக்களும சுதந்திரத்திற்காகப் பாடுபட்டவர்கள். இப்பொழுது தயாரிக்கப்பட்ட அரசியற் சாசனம் சிறுபான்மையினராகிய தமிழ் மக்களுக்கு மொழியுரிமை முதலியன வழங்கவில்லையென்ற காரணத்தினுல் தமிழருடைய அரசியற் கட்சிகளாகிய தமிழ்க் காங்கிரஸ் கட்சியும், தமிழரசுக் கட்சியும் குறித்த குடியரசுத் திட்டத்தை ஆதரிக்கவில்லை. பொதுவாக தமிழ்மக்களுக்கு குறித்த அரசியற் றிட்டம் திருப்தியளிக்கவில்லையென்றே கூறலாம.

நாட்டில் வறுமை இனவேற்றுமைகள் நீங்கக்கூடிய முறையில் அரசியற்றிட்டம் அமைக்கப்படுதல் மக்களுக்கு நன்மை பயக்கும். ஆட்சி புரிபவர்கள் குடியரசுத் திட்டத்தை நடைமுறைக்கு கொண்டு வருங்காலத்தில் அநுபவம உண்டாக நல்வழி பிறக்கும்.

○

## சிவகதியடைய வழி

மனிதன் நற்கதியடைய இறைவன் அவனுக்கு நல்கிய கரணங்களுள் ஒன்று மனம. 'மனம்' என்ற பதம் 'மன்' என்ற தாதுவிலிருந்து பிறந்தது. 'மன்' என்பதன் பொருள் நினைத்தல். ஆகவே மனம் நினைக்கும் கருவியாகும். திருநாவுக்கரசு நாயனுர் உலகத்தவர்கள் தங்கள் மனத்தை வசப்படுத்தி சிவகதியைப் பெறுதற்குரிய உபதேசத்தைப் பின்வரும் தேவாரத்தின் மூலம் தெரிவிக்கின்றனர்.

மெய்ம்மையா முழவைச்செய்து
விருப்பெனும் வித்தைவித்திப்
பொய்ம்மையாங் களையை வாங்கிப்
பொறையெனு நீரைப்பாய்ச்சித்
தம்மையு நோக்கிக்கண்டு தகவெனும்
வேலியிட்டுச்
செம்மையு ணிற்பராகிற் சிவகதி
விளையுமன்றே.

முதலில் பெருமானுர் ஒரு தொண்டனுக்கு உழவுத் தொழிலை நினைவூட்டுகின்றுர்.

வயலை மனதாகவும் உழவனைத் தொண்டனுகவும் சிவகதியை விளைவாகவும் உருவகஞ் செய்கின்றனர். மனமாகிய வயலில் மெய்ம்மையாகிய உழவைச் செய்தல் வேண்டும். மெய்ம்மை, வாய்மை, சத்தியம் என்பன ஒரு பொருட் கிளவிகள். சத்தியம் என்னும் உழவினுல் மனமாகிய வயலைப் பதஞ்செய்த பின்பு அவ்வயலில் பக்தியாகிய விதையை விதைத்தல் வேண்டும். பயிருண்டாகிய பின்பு பயிரோங்கி வளர்தற்குப் பொய்ம்மையென்கின்ற களையைப் பிடுங்குதல் வேண்டும். பயிர் வாடாமலிருப்பதற்கு பொறையென்கின்ற நீரைப் பாய்ச்சுதல் வேண்டும். அழுக்காறு அவா ஆசையாகிய விலங்குகள் பயிரை அழிககாத வண்ணம் அவன் ஒரு வேலியிட்டுக் காவல் செய்தல் வேண்டும். அவன் அதற்கு நீதியென்கின்ற வேலியை அமைத்துக் காவல் செய்தல் வேண்டும். தம்மை நோக்குதல்தான் காவலாகும். ஐம்புல வேடரினுல் அலைப்புண்டு திரியாமல் தன்னைச் சிவனுடைய அடியவனென்பதை உணர்தற்குத் தன்னையும் நோக்கவேண்டும். இவ்விதமான முறையில் ஒரு தொண்டன் தன் மனத்தைப் பயன்படுத்துவானுகில அவனுக்குச் சிவகதி உண்டாகும்.

எவரும் எளிதில் நற்கதியடைதற்குரிய உபாயத்தை வாகீசப்பெருமான் தமது அருமைத் திருவாக்கால் உலகை ஈடேற்ற இத்தேவாரத்தை அருளிச் செய்தார். இறைவன் திருவடிப்பேற்றைப் பெறுதற்கு ஒவ்வொருவரும் தத்தம் மனத்தைப் பயன்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

நெஞ்சே நீ நினையாய் நிமிர்புன்சடை
நின்மலனை
மஞ்சாடும் மலைமங்கை மணுளனை
நெஞ்சே நீ நினையாய்.

என்ற திருவங்கமாலைத் தேவாரத்ாலும் மனத்தைப் பார்த்து பார்வதி மணுளனை நினைக்கும்படி தம் மனத்தைப் பணிக்கின்றுர்.

இவ்விதமான தவவாழ்க்கையை அவர் அநுட்டித்தமையினுல் அவருடைய நெஞ்சு சிவபெருமானுடைய திருவடிக்கே உறைவிடமானது.

அப்பர் பெருமானுடைய திருவாக்கைப் பின்பற்றியொழுகி நமது சிந்தையை சிவனுறையும் கோயிலாக்குவோமாக.

சைவநற் சிந்தனை

## மணிவாசகரெய்திய மெய்ப்பாடுகள்

— திரு. ச அம்பிகைபாகன் அவர்கள் —

[26-3-72-இல் இலங்கை வானெலியில் ஒலிபரப்பப்பெற்றது]

பல இன்னல்களுக்கிடையே மாணிக்கவாசக சுவாமிகள் இறைவனை வழிபட்ட முறையை போற்றித் திருவகவலில் மிக உருக்கமாகப் பாடியுள்ளார். நெருப்பிலிட்ட மெழுகு போல் உள்ளம் உருகி, உருகி உடல்நடுங்கி, கொடிறும் பேதையும் போல் கொண்ட கொள்கையை விடாது, பசியமரத்தில் அறைப்பட்ட ஆணிபோல் உறைத்து நின்று, மனம் வாடி, உடல் அசைவுற்று, உலகத்தவர் தம்மைப் பேயென்று சிரிப்ப அதற்கு வெட்கப்படாது அதை அணியாக ஏற்று, மனங்கோணுது தற்போதமிழந்து, வீடுபேற்றினையே மேலான பொருளாகக் கருதி, கன்றைக் காணுத பசுப்போல மனம் பதைபதைத்து, பிற தெய்வங்களைக் கனவிலும் நினையாது எட்டுதற்கரிய பரம்பொருள் குருமூர்த்தியாக எழுந்தருளியதால் அசட்டைசெய்யாது, குருவின் திருவடிகளை விடாது வணங்கி, என்புருகி, அன்பெனும் ஆறு கரைபுரண்டோட ஐம்புலன்களும் ஒடுங்கி, தலைவனே யென்றழைத்து வாய்குழறி, மயிர்ப்புளகங் கொண்டு, கைம்மலர்குவித்து. இருதய கமலம்மலர, கணகள் ஆனந்தக் கண்ணீர் சொரிய இறைவனுடைய அருட்செயல்களைக் கூறி வணக்கஞ் செலுத்தினர்.

தழலது கண்ட மெழுகது போல
தொழுதுளம உருகி அழுதுடல்
கம்பத்து
ஆடியும் அலறியும் பாடியும்
பரவியும்
கொடிறும் பேதையுங் கொண்
டது விடாதெனும்
படியேயாகி நல்லிடையறு
யன்பிற்
பசுமரத்தணி அறைந்தாற்
போலக்
கசிவது பெருகி கடலென மறுகி
அகங் குழைந்தனு குலமாய்
மெய்விதிர்த்துச்
சகம் பேயென்று தமமைச்
சிரிப்ப
நாணது ஒழிந்து நாடவர்
பழித்துரை
பூணது வாகக் கோணுத லின்றிச்
சதுர் இழந்தறிமால் கொண்டே
சாருங்
கதியது பரமாதி சயமாக
கற்ரு மனமெனக் கதறியும்
பதறியும்
மற்ருேர் தெய்வங் கனவிலும்
நினையாது
அருபரத் தொருவன் அவனியில
வந்து
குருபரனுகி அருளிய
பெருமையைச்
சிறுமையென் றிகழாதே
திருவடி யிணையைப்
பிறவினை அறியா நிழலதுபோல
முனபினனுகிமுனியாது அத்திசை
என்பு நைநதுருகி நெக்கேங்கி
அன்பெனும் ஆறு கரையதுபுரள
நன்புலததொன றிநாதஎன்றரற்றி
உரைதடுமாறிஉரோமஞ்சிலிர்ப்பக்
கரமலர்மொட்டித்து இதையம்
மலரக்
கண்களிகூர நுண்டுளி
யரும்பச்
சாயா அன்பினை நாடொறும்
தழைப்ப
தாயேயாகி வளர்த்தனை போற்றி.

இப்படி மாணிக்கவாசகர் வழிபாடுசெய்து வருங்காலத்தில் இறையவன் மறையவர் கோலத்தில்தோன்றி அவருக்கு அருள்செய்தார். இதைத் திருவண்டப்பகுதியில் தெளிவாக எடுத்துரைக்கின்றுர்.

" தனக் கொப்பில்லாத இறைவன் என்போன்றவர்களும் கேட்கும்படியறிவுறுத்தியருளி போருக்கழைத்தாற்போலயழைத்து அடிமையாகக் கொண்டு, அந்தண வடிவத்தோடு தோன்றியருள் செய்தலும் அன்பு மேலீட்டினுல் என்புருகும்படிஓலமிட்டு, கொந்தளிக்கின்ற கடலின் அலைபோல விழுந்துவிழுந்து பித்துப் பிடித்தவர்போல மயக்கங்கொண்டு, வெறிபிடித்தவர்போலக் களித்து பார்த்தவர் திகிலடையவும், கேட்டவர் அதிசயிக்கவும் பாகனை ஏறவிடாத மதங்கொண்ட யானை போல அன்பினைத் தாங்கமுடியாதபடி, என் உறுப்புக்களையெல்லாம் கொம்புத்தேன் போன்ற இன்ப உணர்ச்சியால் செய்தமைத்தான். புன்னகையால் திரிபுரங்களை எரித்தமாதிரி, அருளென்னும் தீயால எங்கள் அடிமை உடம்புகளை ஒடுககுவித்தான். உள்ளங்கை நெல்

( வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

தம்பிரான் சுவாமிகள்

## தமிழகம் செல்வார்

நல்லை. ஞானசம்பந்தர் ஆதீன கர்த்தர் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் எதிர்வரும் 20-ம் தேதி தமிழகம் செல்லுகின்ருர்கள். மதுரை ஆதீனத்தில் நிகழவிருக்கும் ஞானசம்பந்தப் பெருமான் குருபூசை விழாவில் கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார். தர்மபுரம் ஆதிய இடங்களிலும் நிகழ்ச்சிகளிற் கலந்து கொண்டு 16-6-72 வரை ஈழம் திரும்புவார்கள். (ந. நி.)

## நினைவுமண்டபம்

(1-ம் பக்கத்து வளர்ச்சி)

ரிப் பெற்ருர் ஆசிரிய சங்கத்திற்கு வேண்டிய ஒத்துழைப்பைக் கொடுத்து ஊக்கமளித்தல் அவசியமாகும்.

இப்பெரியாருக்குரித்தான பல நிலங்கள் இங்குள்ளன. அவற்றுள் ஒன்றில் அன்னருடைய நினைவாக 'நினைவு மண்டபம்' ஒன்று நிறுவுவதற்கு எத்தனங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

கலைவளர்ச்சியும், கலையுணர்ச்சியுங் கொண்டு, நமது கிராமத்தின் எதிர்காலச் சந்ததியினருக்கு முன்னேடியாக வாழ்வதுவது மட்டுமல்ல; வாழ்வைக் காட்டவும் வழிகாட்ட வேண்டும். அப்பொழுது தான் சன்மார்க்க நெறி

[illegible] பக்கம்)

## அன்புத் திருப்புகழ்
[செல்வச்சந்நிதி]

திசையள்ளப் பொன்னில மாதரி னிணைவாலே
சிறைதள்ளப் புன்னெறி யூறிய செயலாலே
அசைவுள்ளப் பந்தனை யாயிர மலையாதே
அணிமல்லற் சந்தச ரோருக மருள்வாயே
இசைகொள்ளக் குஞ்சரி மாமணம் புரிவோனே
இதவள்ளிக் கன்னியை நாடிய சிலைபோனே
வசைசொல்லிப் பின்னிடு சூரின் குலகாலா
வரு செல்வச் சந்நிதி மேவிய பெருமாளே.

— அளவையூர் "அருட்கவி" சீ. வி.

உ
சிவமயம்

## யாழ்ப்பாணம், சைவ பரிபாலன சபை நடாத்தும்
# சித்தாந்தத் தேர்வுகள்

ஷ்டி சபை ஆண்டுதோறும் நடாத்தும் சித்தாந்தப் பிரவேச பண்டிதர், சித்தாந்த பால பண்டிதர், சித்தாந்த பண்டிதர் ஆகிய மூன்று தேர்வுகளும் இவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் 18, 19, 20 ம் தேதிகளாகிய வெள்ளி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்திலும் பேரதிய தேர்வாளர் தோற்றும் பிற இடங்களிலும் நடைபெறும்.

தேர்வுச் செயலாளரிடமிருந்து பெறற்பாலனவாகிய தேர்வு விண்ணப்பப் படிவங்கள் நிரப்பப்பட்டு உரிய கட்டணப் பணத்துடன் 20-5-72 சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன் தேர்வுச் செயலாளரிடம் சேர்ப்பிக்கப் படல் வேண்டும்.

தேர்வுக் கட்டணம் :—

| | |
|---|---|
| சித்தாந்த பிரவேச பண்டிதர் | 5 - 00 |
| சித்தாந்த பால பண்டிதர் | 10 - 00 |
| சித்தாந்த பண்டிதர் | 15 - 00 |

வேறு விபரங்கள் தேவைப்படின் எம்மோடு தொடர்பு கொள்க

தேர்வுச் செயலாளர்
சித்தாந்தத் தேர்வுகள்

சைவ பரிபாலன சபை
450, காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம் 20- 4- 72

## பழவினை நீக்கும் பரிகாரி

[ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரன் - தங்கராஜா]

வேடுவப் பெண்ணும் வள்ளிக்கும் வாரணக் குறத்தி நாயகிக்கும்
பீடுறும் வரனும் முருகனவன் சோடியர் தனக்கு ஒரு கணவன்
பேடுகள் இலலா சேவலையும் மஞ்ஞையையும்பெற்ற தனிக்குறவன்
காடுகள் தோறும் குன்றினிலும வீடுகள கொண்ட வேடனவன்
மேடுகள் செல்லும் ஆணடியவன் நாடுகள் மேவிடும் பண்டாரி
பாடுகள் கொண்ட கலியுகத்தின் பழவினை நீக்கும் பரிகாரி
தேடுறும் கழனிக் கடலருகே துள்ளிடும கார்த்திகை மைந்தனவன்
ஆடுறும் மஞ்ஞை வாகனத்து ஆண்டவன் சரவணன் ஆறுமுகன்

சூடிய திங்கள் கங்கையுடை சுந்தரி சுவாமி நாதனவன்
நாடிய தேவர் துயர்தீர்த்த நித்திய நிர்மல நன்முதல்வன்
தேடிய நான்முக நாரணனுங் கூடிய தவமுனி சூரனையே
ஆடிய வாகன மாக்கியவன் அருமறை கொடியெனத் தாங்கியவன்
பாடிய தமிழினைப் பாரினிற்கு பாங்குடன் ஈந்த பைந்தமிழன்
ஊடிய உம்பர் மாமகளை ஊழினால் கூடிய கதிர்வேலன்
கூடிய சமரில் கிரௌஞ்சமலை சங்கரித்தஎம் வேள்மகிணன்.

### மணிவாசகரெய்திய

2ம் பக்கத்து வளர்ச்சி

விக்கனிபோன்ற அமுத மாயினன். அவன் எனக்கருள் செய்ததை எடுத்துரைக்க அறியேன் அதை அறியும் ஆற்றலுமில்லேன். நான் செருக் கற்றுவிட்டேன், எனக்குக் கிடைத்த பேரின்பத்தை முழுதும் குடிக்கவும்மாட்டேன், விழுங்கவும் மாட்டேன், முழுச்சந்திரன் பிரகாசிக்கும்போது கடலிற்பொங்கும் நீர்போல் உள்ளத்தின் உள்ளே பேரின்பம் நிறைந்து பாற்கடலலைபோல்எழச்செய்து, அமுதமானது உரோமத்தின் அடிதோறும் நிரம்பச் செய்தனன். நாய்போன்ற என் உடம்பின் கணனே எழுந்தருளி, இரத்தக் குமா...தோறும், நரம்பு

தோலும், அமுத தாரைகள் ஓடச் செய்தனன். உருகும் தன்மையுடைய உள்ளத்தினால் உடலைமத் தாற்போல, ஒவ்வொரு பகுதியிலும் அமுதம் ஊறுகின்ற உடம்பைத் தந்தனன், கற்கண்டுபோன்ற இனிமையையுடைய கனிகளைத் தேர்ந்துண்ணுகின்ற யானைபோல, என்னை இறுமாப்புடன் இருக்குமாறு செய்தனன்.

### பொங்கல் விழா

யாழ் / இந்துக் கல்லூரி மைதானத்தில அமைந்திருக்கும் ஞான வைரவர் கோவிலில் வைகாசி விசாகப் பொங்கல் விழா எதிர் வரும் 25-5-71 வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கின்றது. அன்று நண்பகல் விசேஷ அபிஷேகமும் பொங்கலும் இடம்பெறும்.

## தவறணை இங்கு வேண்டாம்

### தர்மபரிபாலன சபையின் வேண்டுகோள்.

—0—

காங்கேசன்துறை வீதியில், நாவலர் சந்திக்கருகாமையில் கள்ளுத் தவறணை திறக்கப்பட விருப்பதாக பத்திரிகைகள்மூலம் அறிந்து மனவருத்தம் அடைகின்றோம். மேலே குறிப்பிட்டயிடத்தில் இவ்வாலயம், நாவலர்மகா வித்தியாலயம், பொதுக்கிணறு என்பன உண்டு. ஆகவே இச்சூழ்நிலையில் கள்ளுத தவறணையை அமைக்காது வேறிடத்தில் ஒழுங்கு செய்யுமாறு தர்ம பரிபாலனசபை ஏகமனதாக தீர்மானித்துள்ளது. அதனைத் தங்களுக்கு அனுப்புகின்றோம். ஆவன செய்யுமாறு தயவுடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

மேற்படி தீர்மானம் திரு அ. கந்தையா அவர்கள் தலைமையில் 29-4-72 இல் நடைபெற்ற சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பகவிநாயகராலய தர்மபரிபாலன சபையின நிர்வாகசபைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்
வழ: இல M B 10098

இல, 60 கில்டன் பிளேஸ் பம்பலப்பிட்டி கொழும்பு Dr. வீரவாகு கதிரவேற்பிள்ளை பரமநாயகம் — வழக்காளி,

எதிராக

1, வட்டுக்கோட்டைகிழக்கு அப்பாத்துரை பொன்னுத்துரை
2. ஷ்டியூர் பெண் தனபாக்கியம்: — எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 10098-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1972 ம் ஸு மே மீ 30 ம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபாய் 5700/-ம் 21-6-68 தொடக்கம் 9-8-69 வரைக்கும் ரூபாய் 5000/- க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 498-75 இதில் ரூபா 1850/ கொடுபட்டுள்ளது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி வட்டுக்கோட்டை கோவிற்பற்று வட்டுக்கோட்டை கிழக்கிறை "பெரியபுலம்" நிலபர 5 (ஐந்து) கல்வீடும் கிணறும் வான்பயிர் செய்பயிர்களும வடக் கெலலைக் காணியின் வடக்கெல்லையிலிருக்கும் கிணற்றில் பாகமும் அதன் வளிவாய்க்கால் உரித்தும் சொல்லப்பட்ட நில பர ஐந்துக்கும் எல்லைகிழக்கு ஆனந்தம பெண் கனகம்மாவின் உரிமைக்காரருக்கும் விசுவலிங்கம் கைம்பெண் தங்கம்மாவிற்குமுரிய ஆதனங்கள் வடக்கு ஆனந்தம் பெண் கனகம்மாவின் உரிமைக்காரர்கட்குரிய ஆதனம் மேற்கு ஒழுங்கை தெற்கு விசுவலிங்கம கைம்பெண் தங்கம்மாவிற்குரிய ஆதனம் இதடங்கலும்.

இ. சு. தர்மரத்தினம்
கொமிஷனர் & விலைமதிப்பாளர்
46, 3-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
எ. 71 12-5-72.

### ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயம்

சுதுமலை, ஸ்ரீ புவனேஸ்வவரி அம்பாள் ஆலய 9-ம் திருவிழா எதிர்வரும் 15-5-72 வெள்ளிக்கிழமை சிறப்புற நடைபெறவிருக்கின்றது. அன்று பகல் விசேஷ அபிஷேக ஆராதனைகளும், இரவு சங்கீத கதாப்பிரசங்கமும், விசேஷ மேளக்கச்சேரிகளும் இடம்பெறும்.

### கோப்பாய், திருவருள் தவநெறி மன்றம்

கோப்பாய் திருவருள் தவநெறி மன்றத்தாரின் ஆறுவது அறிவுப் போட்டி வழமைபோல நடைபெறும். முதலாவது பரிசு ரூபா 15/-, இரண்டாவது பரிசு ரூபா 10/- புத்தகங்களும், சான்றிதழ்களும் இதர பரிசில்களாக வழங்கப்படும். போட்டி விதிகளை கௌரவ காரியதரிசயிடம பெற்றுக்கொள்ளலாம்.

### அகில இலங்கை உடற்பயிற்சிப் போட்டி

நூற்றுப்பதினொரு பாடசாலைகளைச் சேர்ந்த 5000 மாணவ மாணவிகள் உடற்பயிற்சிப் போட்டிவிழா இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்றது. இவ்விதமான போட்டி விழா முன ஒருமுறையும் இங்கு நடைபெறவிலலை,

13 வயதுக் குட்பட்டவர்கள்
16 வயதுக் குட்பட்டவர்கள்
19 வயதுக் குட்பட்டவர்கள்

என மூன்று பிரிவுகளாக நிகழ்ச்சிகள் நடைபெறும்.

கனம் கல்விமந்திரியவர்களும் ஷ்டி விழாவைப் பார்வையிடுவார்.

### கலா மண்டபம்

புன்னாலைக்கட்டுவன், ஆயக்கடவை ஸ்ரீ சித்திவிநாயகா ஆலயத்தின் வடக்கு வீதியில் கலா மண்டபம் ஒன்று அமைக்கப்படுகிறது. இம மண்டபத்தில் சமய கலைநிகழ்ச்சிகளநடாத்தப்பெறும்

### திருத்தம

5-5-72 இந்துசாதனத்தில் வழ. இல. M. B. 10885 ஆம் இலக்க கோட்டு விற்பனவு விளம்பரத்தில் எதிராக என்னும பகுதியில் முருகேசு சச்சிதானந்தம் இந்தக காணியாளர் என்றிருப்பதை முருகேசு சச்சிதானந்தம் இந்த காளியப்பர் எனத் திருத்திக்கொள்க.

### பினக்பூல், நுவரெலியா சைவ சமய அபிவிருத்தி மன்றம்

மேற்படி மன்றத்தின் ஐந்தாவதாண்டுப் பொதுக்கூட்டம் மன்றத் தலைவர் திரு. கா. கணபதிப்பிள்ளையின் தலைமையில் அண்மையில் நடைபெற்றது,

இம்மன்றத்தின் உபதலைவராகவும் நுவ / பிளக்பூல் புனித அந்தோனியார் தமிழ் வித்தியாசாலையில் ஆசிரியராகவும் இருந்த திரு வ. பசுபதி அவர்கள் யாழ் / கொழும்புத்துறை அரசினர் ஆசிரிய கல்லூரியில் பயிற்சி பெறத் தெரிவு செய்யப்பட்டதையிட்டு அன்னருக்கு பிரிவுபசாரம் அளிக்கப்பட்டது.

### பலி நிறுத்தம்

இலுப்பைக் கடவை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் வருடா வருடம் ஆனி மாதத்தில் நடைபெற்றுவந்த வேள்வியை இனி நிறுத்துவதென ஆலய பரிபாலனசபையினர் முடிவுசெய்துள்ளனர்.

### எண்பது லட்சம் செலவாம்?



பக்தர்: 'பனை வெல்ல உற்பத்தித் தொழிற்சாலைகளுக்கெனவும் — பனந் தொழிற் சிறு கைத் தொழிற்சாலைகளுக்காகவும் அரசாங்கம் இதுவரை 80 இலட்சம் ரூபா வரை செலவு செய்துள்ளதாம்!

சித்தர்: "அட, இது பெரிய காரியமா? நாட்டுக்குப் பெருநன்மை கொடுக்கக்கூடிய இத் திட்டங்களுக்கு- எண்பது இலட்சமல்ல எண்ணூறு லட்சமாவது செலவு செய்திருக்கலாம் பாருங்கோ..."

"நாயன்மார் - நாதன்"

## சைவ பரிபாலனசபை வெளியீடுகள்

| | ரூபா | சதம் |
|---|---|---|
| திருச்செந்தூர்ப் புராணம் | 10 | 00 |
| தஞ்சைவாணன்கோவை | 6 | 00 |
| திருக்கேதீச்சர புராணம் | 2 | 00 |
| புலியூரந்தாதி | 2 | 00 |
| கிருட்டிணன் தூது (உரையுடன்) | 1 | 75 |
| கந்தபுராணம் — முதல் நூறு செய்யுள் (உரையுடன்) | 1 | 50 |
| திருக்குறள் (1—38 அதிகாரங்கள்) | 1 | 50 |
| ,, (1—20 ,, ) | 1 | 25 |
| கலைமஞ்சரி | 1 | 25 |
| செந்தமிழ்வாசக மஞ்சரி | 1 | 25 |
| நாவலர் சற்குருமணிமாலை | 1 | 00 |
| நாவலர் சமயப்பணி | 1 | 00 |
| ஆரோக்கியமும் தேகப்பயிற்சியும் | 1 | 00 |
| சுப்பிரமணிய பாரதியார் (பாடல்களின் தொகுப்பு) | | 85 |
| சைவத் திருநெறித் தோத்திரத்திரட்டு | | 75 |
| நளவெண்பா - கலிநீங்கு காண்டம் | | 75 |
| சைவசமய அறிமுகம் | | 75 |
| திருக்குறள் (25 — 34 அதிகாரங்கள்) | | 75 |
| சமயகுரவர் சந்தானகுரவர் சரித்திரச் சுருக்கம் | | 75 |
| இலக்கிய வாசகம் மூன்றாம் புத்தகம் | | 65 |
| சைவபோதம் முதற் புத்தகம் | | 60 |
| ,, இரண்டாம் புத்தகம் | | 60 |
| சிதம்பர மான்மியம் | | 50 |
| வினாவெண்பா | | 50 |
| நாவலர் அஞ்சலி | | 50 |
| முருகன் பிள்ளைத்தமிழ் திரட்டு | | 50 |
| சிவபூசைத் திரட்டு | | 50 |
| விநாயகர் | | 40 |
| செந்தமிழ் வாசகமஞ்சரி | 1 | 25 |
| மறைஞான பட்சம் | | 25 |
| நமச்சிவாயமாலை (உரையுடன்) | | 15 |
| நன்னெறி | | 15 |
| வெற்றிவேற்கை | | 10 |
| பால கதா வாசகங்கள் (2, 3, 4ம் வகுப்புகளுக்குரியவை) | | |
| பாலபாடங்கள் | | |

மனேஜர்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை
450. கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

## நினைவு மண்டபம்

2ம் பக்கத்து வளர்ச்சி யை நாம் எதிர்பார்க்கமுடி யும்.

அந்நியராட்சியிற் புன் னெறியதனிற் செல்லும் போக்கினை விலக்கி, மேலாம் நன்னெறியொழு குமாறு சைவமுந் தமிழும் செய்ததவப் பயனுயுதித்த அன்னாரின் தொண்டுக ளைப் போற்றி அறிவுநூல் களைப் பயின்று மேம்பட வும், அரசியல்வாதிகளினு லும், நாத்திகர்களினுலும் நெறியல்லா நெறியிலே ஈர்த்துச் செல்லப்படும் இக் கால இளைஞர் சமுதாயம் உண்மை நெறியுணர்ந்து வாழவும் அந்நினைவு மண் டபம் அருந்துணையாக - பெருந் துணையாக - அழி யாத - நிலையான சின்ன மாக விளங்குமென்பதில் ஐயமில்லை.

அதுவே நாம் அன்னா ரின் வ்லைமதித்தற்குரிய சமயத் தொண்டுக்கு செய் யும் கைமாறுரும். அது திருவருளால் நிறைவேறு மாக.

———

## கோட்டு விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக்கோட்டில் வழ. இல. M. B. 10395
வயிரமுத்து வேலுப்பிள்ளை, விநயகமுதலியார் ரேட், பருத்தித் துறை —வழக்காளி

எதிராக

(மரணம்) 1. செவஸ்தி தாவீது பிள்ளை யோசேப்
2. பெண் லூர்த்தம்மா
1 a யோசேப் இருதயநவரத்தினம், 1-ம் எதிரியின் பிரதிநிதி, 3ம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை. —எதிராளிகள்

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப் படியும் இதனகீழ் விபரிக்கப்படுமாதனத்தை 1972ம் ஸ்ரீ ஆனி மாதம் 12ம் திகதி (12—6—72) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் குறித்த ஆதனத்திடமாகவிருந்து என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி பருத்தித்துறைக் கோவிற்பற்று பருத்தித்துறை சிங்கபாகுதேவன் குறிச்சி 'தில்லைநின்றதெணி' நி. பர 19 ஆனுல் 2-10-1931 இல் உலாந்தா மேஸ்தர் K வேல்முருகுவால் 5725ம் இலக்கப் படத்தின்படி நி. பர. 15 குளி 1, 7/32 இது 1-8-1938ம் ஆ T. சுப்பிரமணியம் உலாந்தா மேஸ்தரால் 397ம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட படப்படி நி. பர. 14 குளி 13½ இதில் 1ம துண்டுக்கு நி. பர. 11 குளி 1, 1/8 இது 2-3-1950ம் ஆண்டு T. சுப்பிரமணியம் உலாந்தா மேஸ்தரால் விந்தாரிக்கப்பட்ட 1346ம் இலக்கப் படத்தில் 1, 2ம் துண்டுகள். குறித்த படத்தில் 2ம் துண்டுக்கு நி. பர. 3 குளி 12, 12/32 தென்னைகள், கிணறும், எல்லை கிழக்கு வயிரமுத்து பெண் முத்துஇரத்தினத்சின் உரிமைக்காரருக்குமுடையவாதனம், வடக்கு கந்தையா பெண் தின்னப்பிள்ளைக் குரியவாதனம், மேற்கு ரேட்டு, தெற்கு தமியான் சகாயனுக்குரியவாதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் மற்றும் யாவும். இதற்கு கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலை ரூபாய் 14,750/-

| | | |
|---|---|---|
| தீர்வைத்தொகை: | ரூபா 13,027 | 00 |
| கொடுத்த தொகை: | 880 | 00 |
| மிகுதி — | 12,147 | 00 |
| ரூபா 11,000/-க்கு 12-9-69 தொடக்கம் 25—6—69 வரை 8 வீத வட்டி | 293 | 33 |
| மொத்தம | 12;440 | 33 |
| வட்டியில் கொடுபட்டது: | 1760 | 60 |
| மிகுதி | 10,680 | 33 |
| ரூபா 10,680-33க்கு 5 வீத வட்டி 26—6—69 தொடக்கம் 27-6-70 வரையும் | 534 | 00 |
| மொத்தம் | 11,214 | 33 |
| 27—6—70 இல் கொடுபட்ட தொகை | 3000 | 00 |
| மிகுதி | 8214 | 33 |
| ரூபா 8214-33க்கு 5 வீத வட்டி 28—6—70 தொடக்கம் 28—4—72 வரையும் | 752 | 94 |
| கோட்டுச்செலவு ரூபாய் 682-05½ இதில் ரூபா 200/- கொடுபட்டது. மிகுதி | 482 | 05½ |
| மொத்தம் ரூபா | 9459 | 32½ |

இன்னும் விற்பனவுத் திகதி வரையுமுள்ள வட்டியும்.

"சந்நிதி வேல்"
பருத்தித்துறை.
29-4-72

கா. முத்துக்குமாரு ஐயர்
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
67; 5-5-72

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல. M B 11338
ஊர்காவற்றுறை கரம்பன் T. A. இராசையாபிள்ளை பெண் எலிசெபெத் முத்தம்மா —வழக்காளி

எதிராக

சரவணை மேற்கு
1. வேலுப்பிள்ளை பொன்னம்பலம்
2. கார்த்திகேசு சுப்பிரமணியமும் பெண் 3. பரமேசுவரி —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11338-ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணிகளை 1972ம் ஸ்ரீ ஆனி மாதம் 10-ந் திகதி (10-6-72) சனிக்கிழமை முற் பகல் 10-00 மணிக்கு முதலாம் காணியும் 10 30 மணிக்கு இரண்டாம் காணியும் அந்தந்தக்காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 5965-ம 24-12-69 தொடக்கம 25-10-70 வரைக்கும் ரூபா 3500/- க்கு 18 வீத வட்டியும் அதன பின முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 481-80.

ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப் பகுதி ஊர்காவற்றுறைக் கோவிற்பற்று சரவணையிறை 'இராச சீமா' பர. நில, இலா, 5, 3/8. கிணற்றில் பங்கும். இதற்கு எல்லை கிழக்கு இராமசாமி செல்லையாபிள்ளைக் குரிய ஆதனம், வடக்கு நாகலிங்கம் பெண் வள்ளியம்மைக் கும் நாகமணி கணபதிப்பிள்ளைக் கும் உரிய ஆதனங்கள். மேற்கு நாகமணி கணபதிப்பிள்ளைக்கும இளையதம்பி செல்லத்துரைக்கும் உரிய ஆதனங்கள். தெற்கு ஒழுங்கை, இதடங்கலும்.

2. மேற்படி இறை 'கோடங்காடு' பர. நில, இலா. 3 வீடு கிணறு மா மரங்கள். இதற்கு எல்லை கிழக்கும் தெற்கும் ஐயம்பிள்ளை பெண் செல்லாச்சிக்குரிய ஆதனங்கள். வடக்கு ஒழுங்கை மேற்கு கணபதிப்பிள்ளை பெண் நகுலேஸ்வரிக்குரிய ஆதனம்.

நா. ஸ்ரீ இரங்கநாதன்
கொமிசனரும் விலைமதிப்பாளரும்
20, பெருமாள்கோவில்
வடக்குஒழுங்கை,
யாழ்ப்பாணம், 22-4-72.
எம்: 73 12-5-72

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
சிறுப்பிட்டி. நீர்வேலி காசிப்பிள்ளை நடராசா —வழக்காளி
வழ. இல: M B 11160

எதிராக

1. மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி சின்னக்குட்டி முத்துக்குமாரு
2. ஷெ யூர் பெண் பொன்னம்மா —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11160ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1972ம் ஆண்டு ஆனி மீ 10ம் திகதி (10-6-72) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 1150/-ம் ரூபா 1000/-க்கு 8—10—69 தொடக்கம் 23—1—1971 வரைக்கும் வரைக்கும் 10 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 331-30 சதம்,

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்பபாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி புத்தூர்க் கோவிற்பற்று சிறுப்பிட்டியிறை "மிதியனும் நாவலடியும், கூனப்பிரிவுதோட்டமும் நிலமும்" பர. நி. இலா ஐந்து (பர. நி. இலா. 5) ¼ வீடும், எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கும், தெற்கும் கந்தையா பொன்னையாவிற்குரியவாதனம், மேற்கு வயிரவன் நல்லானுக்குரியவாதனம், இதடங்கலும் மேற்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றில் தண்ணீர்ப் பாகமும் மைமையான வழிவாய்க்காற் பாவிப்புரித்தும்.

காரைநகர்.
வை. ஏரம்பமூர்த்தி,
கொமிஷ்னரும், விலைமதிப்பாளரும்
1972ம் ஆ. சித்திரை மீ 28ம் திகதி
75—12

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி, 35ம் இலக்கங் கொண்ட வீட்டு வாசி, சின்னையா நவரெட்டனம் —வழக்காளி
இல: M B 11624

எதிராக

யாழ்ப்பாணம் நாவாந்துறை, பீச்ரேட், 114ம் இலக்கங்கொண்ட வீட்டு இரு வாசிகள்
1. ஐயன் மாணிக்கமும் மனைவி 2. சுந்தரம் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11624ம் இலக்க வழக்கில எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1972-ம் ஆண்டு ஆனி மீ 29-ம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 4533/-ம், 28-9-71 தொடக்கம் 26-11-71 வரைக்கும் ரூபா 2500/-க்கு 15 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 550 சதம் 45 அதாவது ஏற்பட்ட செலவு ரூபாய் 410 சதம 80ம், வெலியாத்துச் செலவு ரூபாய் 81 சதம் 20ம், இனிமேலேற்படும செலவு ரூபாய் 58 சதம் 45ம், இதில் தீர்வையின் பின் வட்டியால் கொடுபட்ட தொகை ரூபாய் 1000/-ம், கோட்டுச் செலவால் கொடுபட்ட ரூபாய் 150/- கழிவாக.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கும் டிவிஷனும் வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை "சாறவெளியும் ருசாவிகுளக்கரை" என்னும் போகொண்ட காணி, இந்தக் காணி 1955ம் ஆண்டு மார்கழி மாதம் 3ம திகதி உத்தரவு பெற்ற உலாந்தா யோ. மனவற்பிள்ளை அவர்களால் 792ம் இலக்கங் கொண்ட நிலப்படத்தின்படி பர நி. இலா. 19ம் குளி 4ம இதில் தெற்குப் பக்கமாக பர. நி. இலா. 6. இந்தப் பர. நில. இலாச்சம் 6க்கும் எல்லைகள்:— கிழக்கு காலஞ்சென்ற A. சபாபதியின் ஆதனம், வடக்கு : சின்னையா சின்னப்பொடியின் ஆதனம், மேற்கு : ரேட், தெற்கு : சின்னப்பொடி சின்னத்தம்பியின் உரிமையாளர்களின் ஆதனம், இதடங்கலும் உள்ளதும் உடையதும்.

107, பெரியதெரு,
யாழ்ப்பாணம்,
10—5—72

எ. பி. பி. எதிர்மன்னசிங்கம்
வெந்தீஸ் கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
74, 12-5

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சுப்பிரமணியம் இராசையாவும்
பெண் பொன்னம்மாவும். நல்லூர் யாழ்ப்பாணம் —வழக்காளிகள்
M B 10496

எதிராக

1. காலஞ்சென்ற தனது கணவன் சின்னத்தம்பி சோமசுந்தரத்தின் ஆத்னத்தின் சட்டபூர்வமான பிரதிநிதி சின்னத்தம்பி சோமசுந்தரம் கைம்பெண் பொன்னம்மா.
2. வேலுப்பிள்ளை இராசப்பிள்ளையும்
3. பெண் அன்னலட்சுமியும்; கோப்பாய் தெற்கு —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10496-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் 2 துண்டுக் காணிகளில் முதலாம காணியை 1972-ம் ஆண்டு வைகாசி மாதம் 24-ம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கமும், இரண்டாம் காணியை 1972 ம் ஆண்டு வைகாசி மாதம் 25-ம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கமும அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

ஆதன விபரம்

1 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி கோப்பாய்க் கோயிற்பற்று கோப்பாய் தென்கிறை மண்டுவில் பர நில இலா 4¾, ஷெ மண்டுவில பர நில இலா 6 ஷெ மண்டுவில பர நில இலா 20 மிவைக்குங கூடிய பர நில இலா 30¾ இதில் வடமேற்குப் பக்கமாக அறுதி விற்கப்பட்ட 5 பரப்பு போக மிகுதி பரப்பு நில இலா 25¾. இதன் தென் கிழக்குப்பக்க ஆதனத்துள்ளிருக்கும கிணற்றிலும அதைச் சேர்ந்தவைகளிலும் இதற்குரிய பங்கும இதற் கெல்லை கிழக்கு ரேட்டும் ஐயாத்துரை மகள சிவபாக்கியத்திற்தும் சுப்பர் துரையப்பாவிற்தம் சுப்பர் தம்பிராசாவிற்கும் மார்ககண்டு பொன்னுத்துரைச்குமுரிய ஆதனங்கள் வடக்கு ஒழுங்கையும் இராசையா மனைவி பொன்னம்மாவினுதனமும் மேறகு சின்னப்பு கைம்பெண் வள்ளியம்மைக்கும் வெற்றிவேலு தம்புவிற்குமுரிய ஆதனம் தெற்கு இராசேந்திரம் பெண் நேசம்மாவினுதனம இதடங்கலும்,

2. ஷெ டிஸ்திறிக் கரைச்சிப்பகுதி கரைச்சிப்பற்று புளியம் பொக்கனை கல்வெட்டித்திடல் இறை குமரதுறையும் நவசிவிழாம் பழ வயலும் பர நெல் இலா 300 பரப்புககும் எல்லை கிழக்கு தம்பாப்பிளளை திருநாவுக்கரசுவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம் வடக்கு வாரித்தம்பி கைம்பெண் பாறுபதிக்குரிய ஆதனம் மேற்கு காடு தெற்கு அருணசலம் திருநாவுக்கரசுவுக்கும மறுபேருக்குமுரிய ஆதனம் இதடங்கலிற் சொரியலாக பர நெல் இலா 105 பரப்பும் அதைச் சேர்ந்தவைளுகம்.

32, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

நீ. அன்ரனிப்பிள்ளை
கொம்மிஷனர் & விலைமதிப்பளார்
எம். 72—12-5-72

---

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

---

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக; வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில்; 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 12—5—1972 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர்: திரு. ம...